செய்தி வெளியீடு எண்.39-2019 நாள்: 15.08.2019

# விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் பாப்பனப்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

******

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் பாப்பனப்பட்டு ஊராட்சியில் இன்று (15.08.2019) நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 1099 கிராம ஊராட்சிகளிலும் இன்று கிராமசபைக் கூட்டம் நடைபெற்றது. பாப்பனப்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டு தெரிவித்ததாவது:

தனிநபர் கழிப்பறை கட்டுவதற்கு அரசு மானியமாக ரூ.12,000/- வழங்கி வருகிறது. வீடுகளில் கழிப்பறை கட்டி பயன்படுத்துவதன் மூலம் மக்கள் சுகாதாரமாக வசிக்க முடியும். திறந்த வெளி மலம் கழிக்காத கிராமமாக திகழ்ந்து சுகாதாரத்தில் முன் மாதிரி கிராமமாக விளங்க வேண்டும். ஒவ்வொரு வீடுகளிலும் தனிநபர் கழிப்பறைகள் கட்டப்பட்டு சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் திறந்த வெளியில் மலம் கழிப்பதை தடுக்க முடியும். எதிர்கால சந்ததியினர் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டு தனிநபர் கழிப்பறை ஒவ்வொரு வீட்டிலும் கட்டி பயன்படுத்த வேண்டும்.

கடந்த ஆண்டு மழை இல்லாத காரணத்தினால் ஏற்பட்ட குடிநீர் பிரச்சனையை தீர்க்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்பேரில் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க பொதுமக்களிடையே பல்வேறு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. டெங்கு காய்ச்சல் வராமல் தடுப்பதற்கு வீடுகள் தோறும் நீர் உள்ள பாத்திரங்களை மூடி வைக்க வேண்டும். காய்ச்சல் ஏற்பட்டால் அருகில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று உடனடியாக பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

பிளாஸ்டிக் இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிளாஸ்டிக்கை ஒழிப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். தமிழகத்தை பிளாஸ்டிக் இல்லாத மாநிலமாக உருவாக்கிட ஒவ்வொருவரும் கடைகளுக்குச் செல்லும்போது துணிப்பைகளை எடுத்துச்செல்ல வேண்டும்.

ஜல் சக்தி அபியான் திட்டத்தின்கீழ் ஒவ்வொருவரும் மழைநீரை சேமிக்க வேண்டும். ஒவ்வொரு குடிசை வீடுகளையும் கான்கிரீட் வீடுகளாக மாற்ற ஊராட்சியில் கணக்கீடு செய்யும் போது உரிய பதிவுகளை செய்து கொள்ள வேண்டும். விவசாயிகள் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகள் காப்பீடு செய்து பயன்பெற வேண்டும். அடல்ட் பென்ஷன் யோஜனா திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு 60 வயது முடிந்தால் காப்பீட்டின் அடிப்படையில் மாதந்தோறும் ரூ.1,000/- முதல் ரூ.5,000/- வரை பென்சன் வழங்கப்படும். இத்திட்டத்தில் நீங்கள் அனைவரும் சேர்ந்து பயன்பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

நீர்நிலை ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித்துறை சார்பில் 615 இடங்களில் குளங்கள் கணக்கெடுக்கப்பட்டு தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் 2002 குட்டைகள் சீரமைக்கும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வூராட்சியில் உள்ள அனைவரும் ஊராட்சித்துறையின் பல்வேறு திட்டங்களை நன்கு தெரிந்து கொண்டு பயன்பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பாரத பிரதமரின் ஊரக வீடுகட்டும் திட்டத்தின்கீழ் (PMAY) 37 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இராஜேந்திரன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ஜோதி, துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) டாக்டர்.பாலுசாமி (விழுப்புரம்), டாக்டர்.ஜெமினி (கள்ளக்குறிச்சி), விக்கிரவாண்டி வட்டாட்சியர் திரு.பார்த்திபன், விக்கிரவாண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.அறவாழி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.